செ.வெ.எண். 123 நாள் : 10.07.2017

# மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2 ல் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெற உள்ளது பொது மக்கள் கோரிக்கை மனுக்கள் கொடுத்து பயன்பெறலாம் ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் குறைகளை மதுரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் ஆணையாளர் அவர்களிடமும், அந்தந்த மண்டல அலுவலங்களில் உதவி ஆணையாளர்களிடம் நேரடியாக மனுக்களாக கொடுத்து பயன்பெற்று வருகின்றனர். மேலும் மாநகராட்சியின் அழைப்பு மையம், வாட்ஸ்அப், முகநூல் ஆகிய தகவல் தொழில்நுட்ப முறையிலும் புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாளை **11.07.2017 (செவ்வாய்க்கிழமை)** அன்று காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை **மண்டலம் எண்.2 அலுவலகத்தில்** சிறப்பு குறைதீர் முகாம் ஆணையாளர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே பொதுமக்கள் இச்சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, வீட்டு வரி பெயர் மாற்றம், புதிய வரி விதித்தல், கட்டிட வரைபட அனுமதி, தெருவிளக்கு உள்ளிட்ட தங்கள் கோரிக்கை மனுக்களை கொடுத்து பயன்பெறுமாறு ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு : செ.ம.தொ.அ
மதுரை மாநகராட்சி